முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: **950**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.05.2022**, வெள்ளிக்கிழமை

1. ஆனந்த ஞான சூட்சும வடிவே
அண்ணலாக அவதரித்த எந்தன் திருவுருவே
ஞானமதில் சுப்ரமணியர் யானும் இனிதே
நாட்டிடுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் சித்திரை மாதம் **23** ம் நாள், **06.05.2022** வெள்ளிக்கிழமை)
2. ஆசியதும் அரங்கனுக்கு ஆறுமுகன் யான்
அனுதினம் ஆற்றல் வழங்கி வர
வாசி வசமோடு சர்வ யோகங்களும்
வரமாக தொடர்ந்து அரங்கனுக்கு தந்து வர
3. வருகின்ற அரங்கனின் தேகபலம்
வஜ்ரஞானதேக ஒளிதேக நிலையாக
ஆறுமுகன் யான் சூட்சும பலம்கூட்டி
அரங்கனை உலகோர்கள் வணங்கும்படி
4. வணங்கும்படி வகை செய்து இனிதே
வையகத்தையே மாற்றுகின்ற சித்தியே
இணங்கி அரங்கனுள் வைத்துள்ளேன்
ஏற்று இந்த கலியுக மக்கள்
5. மக்களெல்லாம் அரங்கா என வணங்கி மாதவசிபால் தீட்சை பெற்று
இணக்கமோடு தொடர் தர்மங்கள் இனிதே அரங்கன் கொள்கைகளை ஏற்று வர
வருகவே வையகம் சடுதி மாறும்
வல்லமைபட ஞான யுகமாற்றம் காணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–